# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**<u>ஆணைநாள் – 23.09.2019</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு. சு.முத்துராஜ், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 3093/D/2019</u>**

திரு C. ராஜா .. .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / முதல்வர், .. .. பொது அதிகார அமைப்பு
பஜரங் பொறியியல் கல்லூரி,
அயத்தூர், வேப்பம்பட்டு (R.S.),
திருவள்ளூர் மாவட்டம் - 602 024.

****

**<u>ஆணை</u>**

இவ்வழக்கில் இவ்வாணையத்தால் இன்று (23.09.2019) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு C. ராஜா மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திரு P. அண்ணாமலை, HOD / ECE, முதல்வர் (பொ), பஜரங் பொறியியல் கல்லூரி, திருவள்ளூர் மாவட்டம் ஆகியோர் ஆஜரானார்கள்.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் 10.11.2018 தேதியிட்டு பஜரங் பொறியியல் கல்லூரியின் பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், பஜரங் பொறியியல் கல்லூரியில் 2006-2007 மற்றும் 2007-2008 ஆம் கல்வியாண்டில் கணிதத் துறையில் பணிபுரிந்த விரிவுரையாளர்களின் பணி விவரங்களை தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. தனக்கு தகவல் ஏதும் வழங்கப்படாத காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் 28.01.2019 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை பஜரங் பொறியியல் கல்லூரியின் முதல் மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். அதன் பின்பும். தனக்கு தகவல் ஏதும் வழங்கப்படாத காரணத்தால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான 02.04.2019 தேதியிட்ட தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை இவ்வாணையத்திற்கு அனுப்பி வைத்து, தான் கோரிய தகவல்களை முழுமையாக பெற்றுத் தருமாறு கோரியுள்ளார். மனுதாரரின்

இரண்டாவது மேல்முறையீட்டு மனு இவ்வாணையத்தால் இன்று (23.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் தமது கல்லூரியில் மனுதாரரை நியமனம் செய்ததற்கான பணி நியமன ஆணை இருப்பதாகவும், 11.10.2008 அன்று நிர்வாகத்திற்கு தெரியப்படுத்தாமலேயே பணியிலிருந்து விலகிவிட்டார் என்றும் தெரிவித்தார். இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர் தான் பஜரங் பொறியியல் கல்லூரியில் பணிபுரிந்ததற்கான பணிச்சான்று வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரர் பஜரங் பொறியியல் கல்லூரியில் எந்த தேதியிலிருந்து எந்த தேதி வரை பணிபுரிந்தார் என்ற விவரத்தினை, பணி நியமன ஆணையுடன், இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் மனுதாரருக்கு பதிவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைக்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இம்மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முடித்துக் கொள்கிறது.

**ஒம்/- (சு. முத்துராஜ்)**
**மாநிலத் தகவல் ஆணையர்.**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 3093/D/2019</u>**

பெறுநர்
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர் / முதல்வர்,
பஜரங் பொறியியல் கல்லூரி,
அயத்தூர், வேப்பம்பட்டு (R.S.),
திருவள்ளூர் மாவட்டம் - 602 024.

**<u>மனுதாரர்:-</u>**

திரு C. ராஜா,
எண். 30, அதியமான் தெரு,
ஓம் சக்தி நகர், பூங்குணம், பண்ருட்டி,
கடலூர் மாவட்டம் - 607 106.

Copy to: File / Stock file

KVPS 25.09.2019